1974 சனவரி 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழக அரசு சென்ற மூன்று நான்கு ஆண்டுக் காலமாகவே வற்புறுத்தி வருகிறது. அடுத்த கல்வி ஆண்டிலாவது, 1974-75-ம் ஆண்டிலிருந்தாவது பல்கலைக் கழகத்தைத் துவக்க அனுமதி அளிக்கவேண்டும் என்று மத்திய அரசினைத் தமிழக அரசு வற்புறுத்தி இருக்கிறது.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, மத்திய அரசின் சார்பில் இங்கே சில தொழில் நுட்பக் கல்லூரிகள், **ஐ.ஐ.டி.** போன்று நடத்தப்பட்டுவருகின்றன. நாம் இங்கே தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைக்கும்போது, மத்திய அரசு நடத்தும் தொழில் நுட்பக் கல்லூரிகளும் அதனுடன் ஒருங்கிணைக் கப்படுமா? அல்லது அவை தனியாக இயங்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஐ.ஐ.டி. போன்றவை இதிலே வருகின்ற நிலைமை இருக்காது. பொறியியல் கல்லூரிகள், அரசின் சார்பில் நடத்து வதாக இருந்தாலும், தனியார் நடத்துவதாக இருந்தாலும், அவை இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின்கீழ் வரும். பாலிடெக்னிக் போன்றவற்றையும் இதன்கீழ் கொண்டுவர வாய்ப்பு இருக்கும்.

தட்டெழுத்து, சுருக்கெழுத்து தேர்வுகள்

*122 **வினா—திரு. நா. வீராசாமி:** மாண்புமிகு கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

1973-ம் ஆண்டு, மே திங்களில் தொழில் நுட்பக் கல்வி இயக்கு நரால் நடத்தப்பட்ட தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் வணிகவியல் தேர்வுகளின் முடிவுகள் காலங்கடந்து வெளியிடப் பட்டதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் வணிகவியல் தேர்வுகள் 1973-ஆம் ஆண்டு மே திங்கள் 18-ம் நாளில் ஆரம்பிக்கப்பட்டு சூன் திங்கள் முதல் நாளில் முடிவடைந்து, தேர்வு முடிவுகள் ஆகஸ்டு திங்கள் இருபத்தி மூன்றும் நாளில் அறிவிக்கப்பட்டன. மே திங்களில் நடத்தப்படும் தேர்விற்கு 24 பாடப் பிரிவுகளுக்குத் தேர்வு

நடத்தப்பட வேண்டுமாதலால் மேற்படி தேர்வு நடத்துவதினுல் உண்டாகும் வேலைப்பளு, தேர்வு எழுதும் மாணவர்களின் எண்ணிக்கை இவைகளைப் பார்க்கின் தேர்வு முடிவுகள் அறிவிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்கள் மிகவும் குறைந்தனவாகவே கருதப்பட வேண்டும். மேலும் 1972 ஆம் ஆண்டு மே திங்களில் நடந்த தேர்வுக்கு முடிவுகள் அறிவிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்களை விட 1973-ம் ஆண்டு மே திங்களில் நடத்தப்பட்ட தேர்விற்கு முடிவுகள் அறிவிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்கள் மிகவும் குறைவு.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தொழில் நுட்பக் கல்விக்கென்று தனி இயக்குநர், தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறுர்கள். ஆகவே, உரிய நேரத்தில் தேர்வைத் தொடங்கவும், உரிய நேரத்தில் தேர்வு முடிவை அறிவிக்கவும் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆண்டுக்காண்டு எவ்வளவு விரைவு படுத்த இயலுமோ அவ்வளவுக்கவ்வளவு விரைவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. 1972-ம் ஆண்டு மே திங்களில் நடந்த தேர்வுக்கு முடிவுகள் அறிவிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட காலம் 3 திங்கள் 2 நாட்கள் ஆகும். 1973-ம் ஆண்டு மே திங்களில் நடந்த தேர்வுக்கு முடிவுகள் அறிவிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட காலம் 2 திங்கள் 23 நாட்கள் ஆகும். இன்னும் எவ்வளவு குறைக்க இயலுமோ அவ்வளவு குறைக்கும் முயற்சியினை இந்தத் துறை மேற்கொள்ளும்.

*123 விஞ—**திரு. நா. வீராசாமி :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1973-ம் ஆண்டு, மே திங்களில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் நடத்தப்பட்ட தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் வணிகவியல் தேர்வுகளில் கலந்து கொண்ட மாணவர் களின் எண்ணிக்கை பாடவாரியாக எவ்வளவு?

(இ) அவர்களில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புகளில் தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை பாடவாரியாக எவ்வளவு?